


# வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய

## மகா கும்பாபிஷேக

## வெளியீடு

**2007.06.17**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய

# திருப்பள்ளியெழுச்சி

# பாமாலை

கவிஞர்

இரா. யோகராஜா

## மகா கும்பாபிஷேக வெளியீடு

## 2007.06.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு
திருப்பள்ளியெழுச்சிப் பாமாலை
ஆசிரியர்
இரா. யோகராஜா (சோதிடர்)
வெளியீட்டுரிமை
ராஜ் கிராபிக்ஸ். வதிரி.
பதிப்பு
முதற்பதிப்பு ஆனி 2007
கணணி அமைப்பு
யோ. கபில்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வதிரி பூவற்கரை விநாயகர் மீது திரு.இரா.யோகராஜா அவர்கள் எழுதிய திருப்பள்ளி எழுச்சியைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மணிவாசகர் சிவபெருமானைத் துயிலெழுப்பப்பாடிய பள்ளி எழுச்சி மரபு இன்றுவரை தொடர்கின்றது. ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்ற உண்மைக்கு மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சிசிறந்த எடுத்துக்காட்டாகும்.

மணிவாசகரின் பின் மகாகவிபாரதியார் பாடிய பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி மரபிலே புதியபாதையைத் திறந்துவிட்டது எனலாம். நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பள்ளி எழுச்சியும் விதந்து குறிப்பிடத்தக்கது.

பக்தி உணர்வு தலைப்படும் பொழுது பாடல் கவிதை பிறப்பது தவிர்க்க முடியாததே. திரு.இரா.யோகராஜா பூவற்கரைப் பிள்ளையார் மீது கொண்ட பக்தி வெளிப்பாடு காரணமாக இப்பள்ளி யெழுச்சியைப் பாடியுள்ளார்.

திரு.இரா.யோகராஜாவுக்குள் ஒரு கவிஞன் இருக்கிறான் அவன் அவ்வப்பொழுது வெளிப்படுவான் என்பதற்கு இப்பள்ளி எழுச்சி சான்றாகின்றது.

பூவற்கரைப் புண்ணியனே
மாதவம் செய்தோம்
மன்னவனே பள்ளி எழுந்தருளாயே
என்பன போன்ற தொடர்கள் சுவை பயப்பவை.

இத் திருப்பள்ளி எழுச்சியை இசைவடிவம் கொடுத்து ஒலிப்பதிவு செய்து அதே நாளில் வெளியீடு செய்வது மேலும் பெருமை சேர்க்கும்.

கவிஞர்.திரு.இரா.யோகராஜா கவிதைத்துறையிலே தொடர்ந்து ஈடுபட்டு உழைக்கலாம் .

முயற்சி வெல்க.

*பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா*
*தலைவர்*
*தமிழ்த்துறை/யாழ். பல்கலைக்கழகம்*
*12.06.2007*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**திரோதான சுத்தி தரும்**
**வதிரி பூவற்கரை விநாயகர் திருப்பள்ளி எழுச்சி**

மானுடப் பிறவி மேன்மையானது.

இத்தாவர சங்கமத்துள், கல், புல் முதலிய அற்பப் பிறவிகளில் ஆரம்பித்து, ஆறறிவோடு கூடிய மானுடம் ஆகும்வரை ஓர் உயிரியானது பல்வேறு பிறவிகளை எடுக்கின்றது என்பார்கள்.

மனிதனுக்கு வாய்த்த பகுத்தறிவு மானுட வாழ்வின் நோக்கை அறிவிப்பது, மனித வாழ்வியலின் கடமை உணர்த்துவது.

மானுட வரலாற்றுப் பாதையிலே அனுபூதியர் பலர் மனித வாழ்வின் கடமை உணர்த்திச் சென்றனர்.

அனுபூதி என்பது பிரமாணங்களைக் கொண்டு பெறும் அனுமானம். அது பட்டறிவன்று,

ஆயினும், இன்னதென விபரிக்கப்பட முடியாதது

அனுபூதியர் உணர்ந்தவற்றை இறைமீதான பாடல்களில் வெளிப்படுத்தினர். அப்பாடல்களுள் திருப்பள்ளியெழுச்சியும் ஒரு வகை.

பரமஞானமாகிய சொரூபஞானத்தை உயிர் அறியவிடாது. முக்குணங்களுள் ஒன்றாகிய தாமத குணம் மறைத்திருக்கின்றது. இம்மறைப்பை தீரோதானம் என்பர். இத்திரோதானத்திலிருந்து தமோகுணம் தெளிவடையவேண்டி இறையைப் பணிதலே திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் நோக்கு. இறைவனைத் திருப்பள்ளியெழுச்சி கொள்ளுமாறு வேண்டி இப்பாடல்களைப் பாடிப்பரவும்போதுத தீரோதான சுத்தி வேண்டியே உயிர் பணிகின்றது.

திரோதான சுத்தி வேண்டிப்பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் வரிசையில் ஒன்றாக வதிரி பூவற்கரைப் பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி அமைகின்றது. இப்பாடல்களைத் தந்த சோதிடர் இ.யோகராஜா அவர்களின் பணி சிறக்க இறையருள் நிறைவதாக.

*கலாநிதீ த. கலாமணி*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*கல்வியியற் துறைத யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவமயம்

## கணபதி துணை

## வதிரி பூவற்கரைப் பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி

### காப்பு

மங்களம் தந்திடும் ஆனைமுகா போற்றி
மாயைகள் நீக்கிடும் மன்னவா போற்றி
திங்களைச் சூடியோன் முதல்வனே போற்றி
தெவிட்டாத ஞானத் தெளிவே போற்றி
ஐங்கரா மதிஞான அருள் நிதியே போற்றி
ஆரண முகத்தான் பெருநிதியே போற்றி
சங்கடம் தீர்த்திடும் சற்குருவே போற்றி
சக்திமைந்த பூவற் கரையானே போற்றி
குருவடி வாகி வந்தவரே போற்றி
குவலயத்தி லுண்மைப் பொருளே போற்றி
திருவடி தொழுவார்க் கெழியவனே போற்றி
தீராத வினைகள் தீர்ப்பவரே போற்றி
கருவிகள் ஒடுக்கும் கருத்தினனே போற்றி
கற்பகக் களிறே கடவுளே போற்றி
வருவாய் நின் புகழ் பாடிடவே இங்கு
வாரண முகத்தான் மலர்பாதம் போற்றி.

### பாடல்

**ஆதவன் கீழ்திசை எழுந்துமே வந்தான்**
**ஆர்ப் பரித்தனவே உயிரினங் களெல்லாம்**
**பூதலம் செழிந்திடப் புல்லினம் மகிழ்ந்திட**
**பூவினம் மலர்ந்திட வருவாய் ஓமெனும்**
**நாதப் பொருளே ஓங்கார ரூபனே**
**நாயக பூவற்கரை புண்ணியனே**
**மாதவம் செய்தோம் உன்புகழ் பாடிட**
**மன்னவனே பள்ளி எழுந்தருளாயே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது புலர்ந்தது பூவினம் மலர்ந்தன
போனதே நள்ளிருள் விலகியெ எங்கும்
தொழுதிடும் அடியார் உன்னருள் வேண்டியே
துதித்துமே உந்தன் சந்நிதி தன்னிலே
பாலும் பழமும் பாகுடன் கொழுக்கட்டை
படைத்துன் வரவிளை காத்துமெ நின்றனர்
அமுது புலம்பிடும் அடியவர்குறை நீக்க
ஆனை முகாபள்ளி எழுந்தரு ளாயே

மணமுள்ள சோலையெல்லாம் மகிழ்வெய்தின
மன்னவன் ஆதவன் வரவினைக் கண்டுமே
கணங்களின் அதிபதியே ஸ்ரீகண நாதா
கஜமுகா சூரனை சம்காரம் செய்தவரே
கணபதியே உந்தனின் கடமையைச் செய்திட
கணப் பொழுதினில் வந்தருள் புரிவாய்
குணநிதியே குருபரன் குறைதீர்த் தவரே
குலப்பிரியா பள்ளி எழுந்தரு ளாயே.

கோல மயிலாட குயிலினம் பாட
கொக்கரகோ சேவல் கூவி அழைத்திட
ஞாலமெலா மொளிதர கதிரவன் உதித்தான்
ஞான முதல்வநின் வரவினை நாடுகின்றோம்
ஆலமரத் தருகிருந் தாட்சி செய்திடும்
ஆனைமுகா பூவற் கரையுறை கபிலாய
பாலச்சந்திரா பாற் கடலோன் மருகனே
பால ரூபனே பள்ளியெழுந் தருளாயே.

பூத்துக் குலுங்கிடும் புதுமலர் சோலை எழில்
புத்தொளி வீசிட கதிரவன் உதித்தான்
கூத்தொன்று நீஆடக் கேலிசெய்த சந்திரனை
குறைந்துமே போயிடச் சாபம் இட்டவரே
காத்திருந்து பக்தர் தீபங்கள் ஏற்றியே
கணநாதன் புகழினைப் பாடிப் பரவிட
மூத்த விநாயகா முதல் வணக்கத்தோனே
மூஷிக வாகனனே பள்ளிஎழுந் தருளாயே.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மந்தமாருதம் வீசிடும் சோலை
மணங் கமழும் பூவற் கரைதனிலே
சுந்தர மாயெழுந்து ஆதவன் உதித்தான்
சூர்ப்ப கர்ணரே நின்வருகை வேண்டி
செந்தமிழால் பக்தர் பண்ணிசை பாடியே
செகந்தனில் நின் பெருமை சொல்லவே
இந்திரன் வழிபடு மகா கணபதியே
எம்பெருமான் பள்ளி எழுந் தருளாயே.

கலையருள் தந்த கணேசா வருவாய்
கவலைகள் நீக்கியெமக் கருள் புரிந்திட
நிலையான வாழ்வில் நிம்மதியைத் தந்திட
நிமலன் புதல்வா நித்திலம் வருவாய்
மலைக்குற மகள்வள்ளி கந்தனோடு சேர
மாய விருத்தனாய் வந்த லம்போதரா
சோலை எழில்மிகு பூவற்கரை யுறை
சுமுகாயரே பள்ளி எழுந்தருளாயே.

கருணைக் கடலே கபிலாய வருவாய்
காதலாய்த் தொழுவார்க் கருள் புரிந்திட
இருளை யகற்றி இன்பஒளி ஏற்றிட
இன்னருள் தந்திடும் ஏகப்ரதே வருவாய்
இருள்வினை நீக்கிட சித்திபுத்தி துணையுடன்
இகபர சுகம்தரும் இன்ப விநாயகா
பெருகும் அடியார்க்கு அருளும் பூவற்கரை
புண்ணியனே பள்ளி எழுந்தரு ளாயே.

தஞ்சம் நீயென்றே மன்மதன் கணநாதன்
தாள் பணிந்தேமறு பிறவி பெற்றாரே
வெஞ்சமர் புரிந்து இரணியனை அழிக்க
விஸ்னு பெருமானும் வேண்டிய கணபதியே
கெஞ்சி யழுதால் மனம் கசிந்துருகி
கேட்டவரம் தரு பூவற்கரையானை
அஞ்சலி செய்கிறோம் அருள்மழை பொழிய
ஆனை முகா பள்ளி எழுந்தருளாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுதுணை யின்றி வேண்டிய தேவர்க்காய்
வெஞ்சின ராவணன் மமதை நீக்கியவா
வீறுகொள் கஜமுகா சுரணை ஒழித்த
வீரமகா கணபதி வந்தருள்வாய்
ஆறுதலைத் தரும் ஆனை முகத்தானை
அறுகம்புல் கொண்டு அர்ச்சிக்கு மடியார்கு
பேறுபல தந்திடும் பூவற்கரைப்பதி
பிள்ளையாரே பள்ளி எழுந்தருளாயே.

விருத்தம்

சுந்தரத் தமிழாற் பாட சுமுகாயரே பள்ளி எழுந்தருள்வாய்
ஏற்றம் பல இங்கு தர ஏகதந்தரே பள்ளி எழுந்தருள்வாய்
கலைகள் இங்கு வளர்ந்திட கபிலாயரே பள்ளி எழுந்தருள்வாய்
கவலைகள் யாவும் நீங்கிட கஜகர்ணிகாயரே எழுந்தருள்வாய்
லட்ஜைகள் போக்கிட இங்கு லம்போதரரே எழுந்தருள்வாய்
வினைகள் நீக்கிட இங்கு விகடாயரே துயிலெழுவாய்
விக்கினங்கள் போக்கிட இங்கு விக்னராயரே துயிலெழுவாய்
கருணை ஒளி தந்திட கணபதியே துயிலெழுவாய்
துன்பங்கள் விரட்டிட இங்கு தூமகேதுவே துயிலெழுவாய்
வேதனைகள் யாவும் நீங்கிட விநாயகரே துயிலெழுவாய்
பாவையர் மனம் மகிழ்ந்திட பாலச்சந்திரரே துயிலெழுவாய்
கல்வி செல்வம் தந்திட கஜாணனரே துயிலெழுவாய்
வறுமை நீக்கி உயர்வுதர வக்ர துண்டரே துயிலெழுவாய்
சூழல் யாவும் வளம் செழிக்க சூர்ப்பகர்ணரே துயிலெழுவாய்
எழில்க் கோலம் வதிரிபெற ஏரம்பரே துயிலெழுவாய்
இல்லம் யாவும் மகிழ்ச்சிதர ஸ்கந்பூர்வரே துயிலெழுவாய்
மங்கள சுகந்தம் கமகமக்க மன்னவரே எழுந்தருளாய்
மங்கள வாத்தியம் முழங்கிட மாமணியே எழுந்தருளாய்
மங்கள கீதம் இசைத்திட மாயவன் மருக எழுந்தருளாய்
மங்களம் எங்கும் தந்திட மகா கணபதியே எழுந்தருளாய்.

---

# பக்திப் பாமாலை

இப்பாமாலையை அடியேன் எழுதிய சந்தர்ப்பம் பற்றிய விளக்கத்தை வாசகர்களுக்கு அறியத்தர விரும்புகிறேன். எமது வதிரிக் கிரமத்தில் பலர்மத்தியில் சங்கீத ஆர்வம் இயல்பாகவே காணக்கூடியதாக இருந்தது. அவர்களுள் அமரர் கோ.சபாநாதன் (டாக்டர்) அவர்களும் ஒருவராகும். அவர் வாழ்ந்த காலப்பகுதியில், வானொலி மூலமாக தென்னிந்திய சங்கீத வித்துவான்களின் கச்சேரிகளைக் கேட்ப்பார். அதில் ஏதாவது நல்ல ராகத்தில் அமைந்த தெலுங்குக் கீர்த்தனையை மெட்டுக்கலையாமல் மனனம் செய்திடுவார். அதனைத் தான் மறக்கமுன்னர் என்னிடம் ஓடிவருவார். அவர் என்னோடு கதைக்கும் பாணியில், அடே தம்பி நான் ஆலாபனை செய்யும் ராகத்திற்கமைய எனக்கொரு பாட்டெழுதித்தா என்று என்னை வேண்டிடுவார். நானும் உடனடியாக அதற்கேற்ப பல்லவி அனுபல்லவி சரணமாக ஒரு கீர்த்தனையை கடவுள்களை வேண்டிப் பக்திப்பாடலாக கவியாத்துக் கொடுத்திடுவேன். அவற்றில் என் குலதெய்வமாகிய பூவற்கரையானை வேண்டிப்பாடிய பாடல்களும் அதிகமாகக் காணப்பட்டன. கோ.சபாநாதன் அவர்கள் எதிர்பாராமல் நோய்வாய்ப்பட்டு குறுகிய வயதில் அமரத்துவம் அடைந்துவிட்டார். அவர் இறந்த அதே வருடம் 1984ல் எமது ஆலய வருடாந்த உற்சவத்தில், எமது 6ம் திருவிழா தினத்தில், அவர் ஞாபகமாக ஒரு இசைக்கச்சேரியை ஒழுங்கு செய்திருந்தோம். என்னால் கவிதை வடிவம் அமைக்க இசைவடிவம் கொடுத்து, அவரே பல சந்தர்ப்பங்களில் மேடையில் பாடிய பாடல்களை, அல்வையூர் கலைஞன் இசைநாதமணி அமரர் செ.விவேகானந்தன் மூலமாக பாடிடும் ஒரு இசைக் கச்சேரி நிகழ்வினை ஏற்படுத்தினோம் அந்நிகழ்விற்கு நடிகமணி V.V.வைரமுத்து வயலின் இசைக்க கரவை தங்க பாஸ்கரன் என்பவர் மிருதங்கம் தபேலா வாசித்தார். இந்நிகழ்வினை அன்றே ஒலிநாடாவில் பதிவு செய்து எமது ஆலயத்தில் அதே ஆண்டிலிருந்து சில ஆண்டுகள் ஒலிபரப்பி மூலம் அது ஒலிபரப்பப்பட்டது. அக்காலத்தில் ஆலயத்திற்குச் சொந்தமாக ஒலிபெருக்கியில்லாததால் வாடகைக்கு ஒலிபெருக்கியை ஏற்படுத்துவார்கள். வாடகை ஒலிபெருக்கிக்காரரிடம் கொடுத்த அந்த ஒலிநாடா துர்ப்பாக்கியமாகத் தவறியது மிகச்சிறந்த ஒரு இசைக்கலைஞனின் இனிய குரலில் பாடிய ஒலிநாடா தவறியமை எனக்கு மட்டுமல்ல ஈழத்து இசை ஆர்வலருக்கே பேரிழப்பாகும். அதே கீர்த்தனைகளையே உரிய இராகங்களோடு இன்று எழுத்துருவில் தருகின்றேன். எமது பூவற்கரையான் மீது அன்று பாடிய எனது கவியாப்பில் அடங்கிய பக்திப்பாடல்களையே பாமாலையாக இங்கு எழுத்துருவில் தருவது ஒன்றை இழந்த துயரில் இருந்து மீண்டும் பெருமகிழ் வெய்துகின்றேன். இப்பள்ளியெழுச்சி பாமாலையைத் தொகுத்து இசை வடிவம் கொடுத்து இறுவட்டாக வெளியிட எல்லம் வல்ல என் குலதெய்வம் பூவற்கரையானை நான் இறைஞ்சுகின்றேன்.

இரா.யோகராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : மோகனம்

விருத்தம்

பாவலர் நாவலர் பண்ணிசை வேந்தர்கள்
பார்புகழ் கலைஞர்கள் பரோபகாரச் செல்வர்கள்
மாவாழை பலா தென்னை செழித்து வளர்ந் தோங்கும்
மலர்சோலை எழில் மாடமாளிகைமலி வதிரியில்
சேவல்கூவி பறவையினம் பண்ணிசை ஒலிக்க
செவ்வானம் சிவக்க செங்கதிரோன் எழுகின்றான்
காவலனாம் பூவற்கரை தனிலே குடிகொண்டஎம்
கணபதியின் காண்டாமணி ஓமென்று ஒலிக்கிறது.

இராகம் : ஹம்சத்தொனி

பல்லவி.

தொந்திக் கணபதியே வந்திடுவாய்- உன்னை
துதித்து நான்பாடிட வந்தருள்வாய்.

அனு பல்லவி.

சந்தமொடு நானும் பாட்டிசைத்தே- தினம்
சாற்றுவேன் பாமாலை நின்புகழிசைத்தே

சரணம்

பாவக் கறைகள் போக்கி உந்தனருள் வேண்டி
பக்தர்கள் என்றும் நின்பாதம் பணிந்திடுவார்
பூவற்கரை தன்னில் வீற்றிருக்கும் புண்ணியா
போக்கிடவே வினைகள் உன்னையே வணங்கிடுவார்

நேசமொடு உந்தனை நித்தமும் நாடிவந்தோம்
நிர்மலன் மைந்தனே நின்னருள் தேடிவந்தோம்
வாசமலர் சோலை வதிரிபூவற் கரையானே
வல்வினை தீர்த்துமே வரம்பல தருபவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம் : சக்ரவாகம்**

**பல்லவி.**

அருள்தரும் திருவுருவம் ஆனைமுகன் உருவம்
அடைக்கலம் தருமுருவம் ஆட்கொள்ள வருமுருவம்.

**அனுபல்லவி**

பெருநிதியே கற்பகமே பூவற்கரை யினற்புதமே
பேரின்பம் தரும்பிள்ளை பெருமைசேர் மூத்தபிள்ளை

**சரணம்**

நாடியேஉன்னை வணங்குகின்றேன்- எந்த
நாளுமேபூசை கானுகின்றேனே
பாடியெ உன்னை அழைக்கின்றேன்- வாராய்
பாமாலையொன்று சூடுகின்றேனே.

ஏங்கித்தினம் இங்கு தவிக்கின்றேன்- என்
ஏக்கத்தீர என்றும் தொழுகின்றேனே
தாங்குமிதயம் எங்கும் தேடுகின்றேன்- உனது
தரிசனம் காணத் தான் துடிக்கின்றேனே

**இராகம் : சாருகேசி.**

**பல்லவி**

நல்லதமிழ் பாடலொன்று நான்பாட நீவேண்டும்
நாடிவரும் பக்தனென் நாவில்குடி யிருக்கவேண்டும்

**அனு பல்லவி**

வல்லகண பதியுனை வலம்வந்தே னருள்தாராய்
வதிரிபூவற் கரையானே வரம்தந்து காக்கவாராய்

**சரணம்**

அல்லும்பகல் உனைநினைந்து அபயமென வந்தோமையா
ஆனைமுகன் நாமமதை அஞ்சியஞ்சிக் கூறினோமையா
வெல்லும்திறன் நீயேயானாய் விடிவைநோக்கி சென்றோமையா
வினைதீர்த்து எமைக்காத்த வேழமுகன் திருப்பாதமையா

தம்முயிர் காக்கவெண்ணி தாங்கொணா துயரமொடு
தஞ்சமென வந்தோர்க்கு தன்கரம் ஐந்தொடு
நம்பிவந் தோர்கருளிய நாயகபூவற் கரையானே
நாடிவரும் எந்தன் நாவிலிருப்பாய் விக்னேஸ்வரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : சிம்மேந்திரமத்திமம்

பல்லவி

ஒருகோடி பாடலுனை உருகிநான் பாடுவேன்
உன்திரு வடிதேடி உனைத்தினம் பாடுவேன்

அனுபல்லவி

வருமடியார்க் கென்று வல்வினை தீர்ப்பானே
வல்லகண பதிநீயே வதிரிபூவற் கரையானே

சரணம்

அன்புமணம் வீசிஇங்கு அறிவுநிலை ஓங்கநீயே
அறநெறி தழைத்திட ஐந்தெழுத்தை தந்ததும் நீயே
துன்பநிலை வாழ்வின் துயரமெலாம் நீக்கும் நீயே
தும்பிமுகா பூவற்கரைத் தூயவன் ஐங்கரன் நீயே

எந்தநிலை வரினுமிங்கு உறுதுணை விநாயகனே
எகநாதன் மைந்தா எமைக்காக்கும் விக்னேஸ்வரனே
கந்தவேள் அண்ணா கரிமுகா மூசிக வாகனனே
கவிபாடும் எத்தனைக் காத்திடும் ஸ்ரீகணேசனே.

இராகம் : சஹானா

பல்லவி

வேழமுகன் திரு பாதமதைத் - தொழ
விரும்பிப் புனைவேன் சீர்கவிதை

அனு பல்லவி

ஞாலமெலா மொளி தந்திடவே - என்
ஞான முதல்வன் வந்திடவே

சரணம்

பைந்தமிழ் ஓசை ஓங்கிடவே - வரும்
பாவலன் குறை நீங்கிடவே
ஐந்தெழுத்தையான் சொல்லிடவே - என்
ஆனைமுக னருள் பொழிந்திடவே

வண்ண மலர்ச் சோலைதனில் - உயர்
வதிரி பூவற் கரைதனிலே
பண்ணிசை க்கும் பராத்பரனே - சிவ
பார்வதி மைந்தா லம்போதரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : ஹிந்தோளம்

### பல்லவி

பெருகாதா உந்தன் அன்புவெள்ளம்
பேரருள் தந்திடும் உந்தனுள்ளம்

### அனு பல்லவி

உருகாதா எந்தன் கானமேகேட்டு
ஓங்கார ரூபாவுன் ஒளியைஊட்டு

### சரணம்

இசையால் மயங்கவைத்தால் உன்மனம் இரங்காதோ
ஏழைநான் நாடிவந்தால் உன்னருள் நெருங்காதோ
அசையாத கல்நெஞ்சும் இசையில் கசிந்துருகாதோ
ஆனைமுகா உனைத்தொழ ஆவல் பெருகாதோ.

இளந்தென்றல் வீசிவரும் பசுஞ் சோலைதனிலே
இனியநல் வதிரி பூவற் கரைதனிலே
வளம்தந்து காக்குமுன் அருள் ஒளிதனிலே
வணங்கிடு வோமுன் திருப் பாதந்தனிலே (பெருகா)

இராகம் : வாகீஸ்வரி

### பல்லவி

வானமுத தேன்சொரி எழில்பூவற்கரை யுறையும்
வளமார் வதிரியில் அருள்தனைச் சொரியும் (வான)

### அனு பல்லவி

ஞான முதல்வனே வேழமுக நிமலன் மைந்தனே
ஞாலமெல்லாம் காத்தருள் புரிந்திடு மைங்கரனே (வானமுத)

### சரணம்

வாசமலர்ச் சோலை வந்துமனம் களிக்க
வதிரிபூவற் கரையில் வல்லோன் வரமளிக்க
நேசக்கரம் நீட்டி நித்தம் தொழுகின்றோமே
நீங்கிடவே எம்பிணி நின்னையே பணிகின்றோமே. (வானமுத)

அஞ்சி அஞ்சி ஏங்கி ஆனை முகனை வேண்டி
அபய மென வந்து ஆறுதல் தனை வேண்டி
கஞ்சி கூழு மின்றி கதறி அழுதோ மையா
காத்து எம்மை மீட்ட கணேசன் பாத மையா. (வானமுத)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : தோடி

### பல்லவி

உன்திரு நாமம் உரைத்திடு வேன்தினம்
உன்நிலை வாலென்றும் உருகிடு தேமனம்

### அனு பல்லவி

உன்திரு முகத்தை ஒருதரம் காணவே
ஓங்கார ரூபனே ஓடிவா காணவே

### சரணம்

ஒருதரம் காட்சிதந்து உருவமதை காட்டாயோ
உயர்பூவற் கரையானே உன்னெழிலைக் காட்டாயோ
பெருகிடும் கண்ணீரும் பேராறாய் வழிந்தோட
பிறைசூடி மைந்தாவா பிணிதீர்த் தருள்கூட

பாடியிங்கு பக்தியால் பரிதவிக்கு மேழைக்கே
பாராமுக மேனோ பவனிவா வேளைக்கே
பாடிடும் பாவிக்கருள பறந்தோடி வருவாயே
பராத்பரனே நான் பண்ணிசைக்க வருவாயே.

இராகம் : அடாணா

### பல்லவி

பெருமைக் குரியபிள்ளை யாரப்பா
பேரருள் புரிந்திடும் பிள்ளை யாரப்பா

### அனு பல்லவி

முருகனின் அண்ணனே ஏகதந்தனே
மூஷிகவாகனம் கொண்ட விகடனே

### சரணம்

உலகெலாம் உன்தம்பி சுற்றியே வலம்வர
உண்மைப் பொருள்தனை கூறிமாங்கனிபெற
வலம்வந்து அம்மை அப்பனை வணங்கியே
வல்லவனாய் பரிசும் பெற்றுவனும் நீயே

சீரோங்கு வதிரி பூவற் கரையின்
சீர்சிறப்பு கல்வி தந்திடும் நாயகனே
பாரோங்கு புலவர் பல்கலை மாந்தரை
பாரினில் தந்திட்ட விக்ன விநாயகனே (பெருமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : ஹம்சானந்தி

**பல்லவி**

பூவற்கரையில் வாழும் புதுமை விநாயகா
போற்றியுனைத் தொழுவோம் பூவடி தரும் நாயகா (பூவற்)

**அனு பல்லவி**

பாவக்கறை நீக்கி பக்தர்கருள் புரிவாய்
பார்வதிசிவ மைந்தா பாலச்சந்திரா வருவாய் (பூவற்)

**சரணம்**

செந்தமிழ் ஔவையின் அகவலைப் பாடிட
சித்தம் இரங்கியுன் சேவடி தந்திட
சிந்தனைக் கினிய தீந்தமிழ்க் கவிதை
சீரோடு எழுதிட சிந்திடுன் அருளினை (பூவற்)

என்னருங் கவிகேட்டு இரங்கியருள் தாராய்
எங்கும் நிறைந்த எழில் மிகு சோதியே
உன்னிரு மலரடி உறுதுணையே ஐயா
ஓங்கார ரூபனே ஒளிதருபெரு நிதியே (பூவற்)

இராகம் : ரஞ்சனி

**பல்லவி**

காலையில் கதிரவன் எழுகின்றான் - இங்கு
காண்டா மணியோசை கேட்கின்றது

**அனு பல்லவி**

சோலையெழில் வதிரிபூவற் கரைதனில்
சோதியென்று தீபமாய் தெரிகின்றது

**சரணம்**

வானுயர்ந்த வண்ணம் எழில் மிகு கோபுரம்
வருமடியார் வணங்கும் ஓங்கார ரூபம்
தேனுலரா மலர்த் தீம்பொழில் சோலை
திருவருள் சொரிந்திடும் அருட்பொருஞ் சோலை (காலையில்)

தஞ்சமென்றே அவன் தாமரைப் பதம் நாடி
தாங்கொணா துயரொடு தலமினைத் தேடி
கெஞ்சியழுதால் அந்தக் கணபதியின் அருள்
கிட்டிட நீங்கிடுமே கொடும்துயர இருள் (காலையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : கானடா

### பல்லவி

முருகனைக் கண்டேன் - பூவற்கரையில்
இருமாதர் புடைசூழ அழகு மயூரமதில்

### அனு பல்லவி

உருகியுருகி உந்தன் திருவடிதனை நாடி
உள்ளம் அலையுதுன் பேரருளைத் தேடி (முருகனை)

### சரணம்

ஆறுமுகன் புகழ் அரும் கவசம் பாட
ஆறுதினம் வேண்டி அன்பரொன்றாய்க் கூட
பேறுபல தந்திடும் பேரின்ப ரூபனே
பெருமா மறை போற்றும் புனிதாவா குமரனே (முருகனை)

ஆறுபடை இருக்க இங்கு கோயில் கொண்டு
அண்ணனுக்குத் துணையாய் அருள் வேல் கொண்டு
ஏறுமயில் ஏறும் ஈசன் உமை பாலனே
எங்கள் வினை தீர்த்து இன்னருள்தா வேலனே (முருகனை)

இராகம் : ஆனந்த பைரவி அல்லது சாமா

### பல்லவி

அம்மாயென் றழுதிட அமுதப் பாலூட்டினாள்
ஆதாரம் நீயென்றால் அணைத்திடும் அன்னையவள் (அம்மா)

### அனு பல்லவி

இம்மநிலத் தினில் ஈடில்லா சக்தி நீ
இன்பசுகம் யாவும் எமக்களிக்கும் சக்தி நீ (அம்மா)

### சரணம்

ஆதிசிவன் சக்தியாய் அரைப் பாகமாகி
அகில மெல்லாம் அசையக் காரணமாகி
நீதிநெறி தளைக்க நின்னருள் புரிந்திடுவாய்
நிர்மலன் தேவியே நிம்மதியைத் தந்திடுவாய்

தும்பிக்கை யானோடு துணையிருக்கும் தாயே
துலங்கு பூவற்கரையில் துதிக்கும் அம்மையே
அம்பிகை கௌமாரி சிவகாமி முத்துமாரியம்மா
அபிராமி இசைமாரி காளிசந்தன மாரியம்மா (அம்மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம் : தேஸ்**

**பல்லவி**

பூத்தமலர் சொரியும் பூவற்கரை வதிரி
புனிதமணம் கமழும் புண்ணிய தலப் பதி

**அனு பல்லவி**

மூத்த விநாயகரின் முன்னிருக்கு மெம்பிரான்
முன்வினை தோஷம் நீக்க நந்த கோபாலன்

**சரணம்**

ஞாயிறு திங்களோடு சேய் புதன் சேர்ந்து
ஞானகுரு சுக்கிர சனி ராகு கேது
மாசறு பாவ தோஷம் மாந்தர்க்கு நீக்கிட
மக்களென்றும் துதிப்பார் மகிழ்வுடன் வாழ்ந்திட

ஆதியில் கோயில் கொண்ட அண்ணமாரே
ஆதாரம் நீயென அனைத்தும் தந்தவரே
நீதி நெறி செல்வம் நிலைத்திடக் காப்பவரே
நித்தமெமை காக்கும் காவற் தெய்வம் வைரவரே.

**இராகம் : மத்தியமாவதி**

**பல்லவி**

மங்களம் பாடிமகிழ்வோம் - தரணி
எங்கும் ஒளி தந்திடும் எழில்மிகு ஏரம்பனை

**அனு பல்லவி**

நங்கையர் சித்திபுத்தி நாதனும் புடைசூழ
மங்களம் தந்திட மானிலம் சிறக்கும்

**சரணம்**

கலைகள் தந்திடும் கணபதியே வாழி
கவிஞர்க் கருள்தரு குணநிதியே வாழி
நிலையான வாழ்வுதரும் கணேசா வாழி
நிம்மதியைத் தந்திடும் விக்னேஸ்வர வாழி

அஞ்சினார்க் கபயம் அளித்தவா மங்களம்
ஆறுதலைத் தந்திடும் ஆனைமுகா மங்களம்
வெஞ்சமர் வேலவன் அண்ணனிற்கு மங்களம்
வேழமுகா பூவற்கரை நாயகர்க்கு மங்களம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரைப்பற்றி



திரு. இராசா யோகராசா அவர்கள் வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்விபயின்ற இவர், கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையின் அன்புக்குரிய மாணவராகி, அவரிடமே கவிதை எழுதப் பயின்றார். பாடசாலைக் காலத்திலேயே கவிதை எழுதும் ஆற்றலை வளர்த்து அதன் ஆறாத் தொடர்சியாக இன்று உங்கள் கைகளில் தவழ்வதுதான் வதிரி பூவற்கரைப்பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சிப் பாமாலை.

திரு. இரா. யோகராஜா பல வடிவங்களில் பரிணமிக்கின்றவர். சிறந்த விளையாட்டு வீரர், நடிகர், கவிஞர், நாட்டியநாடக ஆசிரியர், சோதிடர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.

கவிதை எழுதும் திறன் இவருடைய பீட்டனார் வரகவி க. வே. சின்னப் பிள்ளை வைத்தியர் வழியாகவும், நடிப்பாற்றல் இவருடைய தந்தை வழிப்பேரன் நல்லதங்காள் முருகர், தந்தை கம்பர் இராசா வழியாலும் கிடைத்த நற்பேறாகும். இவர் பலவேறு சந்தர்ப்பங்களில் பல தனிக்கவிதைகளை எழுதியுள்ளார். கவியரங்கங்கள் பலவற்றில் பங்குபற்றியுள்ளார். இவரால் எழுதப்பட்ட நாட்டிய நாடகங்கள் முப்பெரும் தேவிகள், நவராத்திரி கொலு, தாட்ஷாயினி, வெற்றிக்கனி, வள்ளிதிருமணம் , மார்க்கண்டேயன் சாந்தியும் சமரதானமும் இவை பலமுறை மேடையேற்றப்பட்டன. பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியும் ஈட்டிக்கொடுத்தன. வீரசிவாஜி (சரித்திரம்) அன்றோருநாள், அலிமா(சமூகம்) காலம் கெட்டுப்போச்சு (தூளயைம்) நாடகங்கள் என்பன வற்றில் இவருடைய நடிப்பு முத்திரை பதித்துள்ளது. இன்று பிரபல்யம் மிக்க சோதிடராகத் திகழ்கிறார்.

வதிரியின் பல சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளுடன் தன்னை இணைத்துக் கொண்டவர். நீண்டகாலமாக எமது ஆலய பரிபாலன சபையில் அதீத ஈடுபாடு கொண்டவர்.

பூவற்கரையான் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடாக சைவப்புலவர் எழுதிய ஊஞ்சல் பாடல்களுடன் பாடல்களுக்குரிய இலக்கணங்களுக்கமைய வாழி, எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் முதலானவற்றைப் பாடியுள்ளார். அது முன்னொரு பதிப்பாக வெளிவந்தது. வதிரி பூவற்கரைப்பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சிப்பாமாலை இன்று கும்பாபிஷேக வெளியீடாக வருவது பெருமைக்குரிய ஒன்றாகும். இது போல் மேலும் பல பூவற்கரையான் புகழ்பாடும் பாமாலைகள் ஆக்க இறைவன் என்றும் அவரிற்கு அருள்புரிவாராக.

அ.விஜயநாதன்.B.A(Dip.in.Edu)
அதிபர் யா/சிதம்பராக் கல்லூரி
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org